எஸ்.ஆரோக்கிய ராஜீவ்

நாகநாதன் பாண்டி

தனலஷ்மி சேகர்

சுபா வெங்கடேசன்

ரேவதி வீரமணி

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் மேலும் 5 தமிழக தடகள வீரர்களுக்கு தலா ரூ.5 லட்சம் ஊக்கத்தொகை

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூலை 7–

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் மேலும் 5 தமிழக வீரர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு விளையாட்டில் ஆர்வத்தைப் பெருக்கவும் அவர்கள் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்குகொள்ளவும் அரசு தேவையான பயிற்சிகளையும், ஊக்கத்தொகைகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

அந்த வகையில், ஜப்பான் டோக்கியோவில் 23.7.2021 முதல் 8.8.2021 வரை நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் தடகள விளையாட்டில் 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் ஆண்கள் பிரிவில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த எஸ்.ஆரோக்கிய ராஜீவ் மற்றும் நாகநாதன் பாண்டி மற்றும் 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் கலப்புப் பிரிவில் சுபா வெங்கடேசன், தனலஷ்மி சேகர் மற்றும் ரேவதி வீரமணி என மொத்தம் 5 தடகள வீரர்களுக்கு அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் 5 லட்சம் வீதம் ரூபாய் 25 லட்சம் வழங்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

இவ்வீரர்களில், எஸ்.ஆரோக்கிய ராஜீவ் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உயர்மட்ட விளையாட்டு வீரர்களுக்கான ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், சுபா வெங்கடேசன் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம் ஆகிய உயரிய திட்டங்களின்கீழ்ப் பயிற்சி பெற்றவர்களாவார்கள்.

ஏற்கனவே, ஜப்பான், டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 வீரர்களுக்குத் தலா ரூபாய் 5 லட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 30 லட்சம் அரசின் சிறப்பு ஊக்கத்தொகையினைக் கடந்த 26.6.2021 அன்றும், மேலும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சி.ஏ. பவானி தேவிக்கு ரூ. 5 லட்சம் சிறப்பு ஊக்கத் தொகையினை 20.6.2021 அன்றும் முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது.

இப்போது 5 வீரர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையையும் சேர்த்து மொத்தம் 12 பேருக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

தமிழக நீர்வள திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்க வேண்டும்

அமைச்சர் துரைமுருகன் மத்திய அமைச்சரிடம் கோரிக்கை

புதுடெல்லி, ஜூலை 7–

தமிழக நீர்வள திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்க வேண்டும் என்று மத்திய அமைச்சரிடம் தமிழக அமைச்சர் துரைமுருகன் நேரில் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் ஒன்றிய அரசின் ஜல்சக்தித் துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத்தை நேற்று (6–ந் தேதி) புதுடெல்லியில் சந்தித்து தமிழ்நாட்டின் நீர்வளம் சம்பந்தமான பிரச்சனைகளை விவாதித்து கீழ்க்கண்ட பொருள்கள் சந்பந்தமான கோரிக்கைகளை முன் வைத்து அவற்றை விரைவாக நிறைவேற்ற வலியுறுத்தினார்.

★ காவிரியில் தமிழ்நாட்டிற்கு மாதாந்திர வாரியாக நீரை பிலிகுண்டுலுவில் அளிப்பதற்கு கர்நாடக அரசை வலியுறுத்தவும், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தமிழ்நாட்டிற்கு கர்நாடகம் நீர் அளிப்பதை இறுதி செய்யவும், ஜல்சக்தி அமைச்சகம் தேவையான அறிவுரைகள் வழங்க வலியுறுத்தப்பட்டது.

★ கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டும் திட்டம் தமிழகத்திற்கு பாதகத்தை விளைவிக்கும் என்றும், தமிழக விவசாயிகள் நலனுக்கு எதிரானது என்றும் தெரிவித்து இத்திட்டத்திற்கு எந்தவித அனுமதியும் கொடுக்கக்கூடாது என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

★ பெண்ணையாற்றின் கிளை நதியான மார்கண்டேய நதியின் குறுக்கே கர்நாடக அரசு அணை கட்டியுள்ளது பற்றியும் மற்றும் பெண்ணையாற்றின் குறுக்கே சில கட்டுமானங்களையும் நீர் இரைத்தலையும் தவிர்க்கவும் ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண உச்சநீதிமன்றம் 2019–ல் ஆணையிட்டுள்ளபடி விரைவில் நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தப்பட்டது.

முல்லை பெரியாறு

★ முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடி உயர்த்துவதற்கு சிற்றணை மற்றும் மண் அணை ஆகியவற்றை வலுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 23 மரங்களை வெட்டுவதற்கு அனுமதி அளிக்கவும், மேலும் தாமதிக்காமல் இருக்க கேரள அரசுக்கு அறிவுரை வழங்கவும், அணைக்கு செல்ல வனப்பகுதியில் உள்ள சாலையை சரிசெய்ய உடன் அனுமதி அளிக்கவும், கேரள அரசை வலியுறுத்தவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

★ காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைத்து 3 வருடங்கள் ஆகிறது. அதற்கு ஒரு நிரந்தர தலைவரை இன்னும் மத்திய அரசு நியமிக்கவில்லை. ஆணையத்திற்கு தேவையான முழு நேர தலைவரை உடனே நியமிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

★ கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – காவிரி இணைப்பு திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு 83 டிஎம்சிக்கும் கூடுதலாக நீர் ஒதுக்கவும், தமிழ்நாட்டில் இணைப்புக்கால்வாயை உயர்மட்டத்தில் எடுத்துச்சென்று கல்லணையில் இணைக்காமல் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கட்டளை கதவணையில் இணைக்குமாறும், இத்திட்டம் சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த இணைப்பு திட்டத்தை இறுதி செய்து உடன் தேசிய திட்டமாக செயல்படுத்தவும் வலியுறுத்தப்பட்டது.

தாமிரபரணி – கருமேனியாறு

★ தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்பு கால்வாய் திட்டத்திற்கு நிதியளிக்க நீண்டகாலமாக தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டு வருகிறது. இது வெள்ளநீரை உபயோகிக்க கூடிய ஒரு பயனுள்ள திட்டமாகும். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இருப்பினும் நிதி இன்னும் அளிக்கப்படவில்லை. இப்பயனுள்ள திட்டத்தை விரைவில் முழுமையாக முடிக்க நிதி வழங்குமாறு கேட்டு கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.712 கோடி செலவிட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு நிதியாக ரூ.487 கோடி (60 சதவீதம்) உடன் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

★ இதே போல் நீர்நிலைகள் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன. ஆனால், இத்திட்டத்திற்குரிய நிதி ரூ.34.25 கோடி மட்டும் தான் அளிக்கப்பட்டுள்ளது. மீதி ரூ.44.48 கோடி மத்திய அரசிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை. இந்த நிதியை உடன் அளிக்க வலியுறுத்தப்பட்டது.

மேற்கண்ட நிகழ்வில் தமிழக பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா, காவிரி தொழிற்நுட்பக் குழுத் தலைவர் ஆர்.சுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்று அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

டெல்லியில் மத்திய நீர்வளத்துறை மந்திரி கஜேந்திர சிங் ஷெகாவத்தை தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சந்தித்து, தமிழ்நாட்டில் நீர்வளம் சம்பந்தமான கோரிக்கைகளை வழங்கி, மேகதாது அணை கட்ட அனுமதிக்கக்கூடாது என வலியுறுத்தினார். அப்போது, பொதுப்பணித்துறை கூடுதல் செயலாளர் சந்தீப் சக்சேனா, காவிரி தொழில் நுட்பக் குழு தலைவர் ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவன புதிய தலைவராக குறிஞ்சி என்.சிவகுமார் நியமனம்: ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஜூலை 7–

தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனத்திற்குப் புதிய தலைவராக குறிஞ்சி என்.சிவகுமாரை நியமித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:–

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 4.10.2007 அன்று அப்போதைய முதலமைச்சர் கலைஞரால் துவக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், தனது சேவையைத் துவங்குவதற்கு முன்னர், ஒரு சில தனியார் நிறுவனங்கள் கேபிள் தொழிலில் ஆதிக்கம் செலுத்தி வந்ததோடு, கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து அதிக அளவு கட்டணத்தை வசூலித்து வந்தன.

இந்தக் குறைபாட்டினைக் களையும் பொருட்டுத் தொடங்கப்பட்ட தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கேபிள் டிவி ஆப்பரேட்டர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டும், குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கத்துடனும் செயல்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், அரசின் பல்வேறு சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, அரசு இ–சேவை மையங்களை நிறுவி, அதன்மூலம் இணையச் சேவைகளையும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சிறப்பான முறையில் வழங்கி வருகிறது.

இந்த சூழ்நிலையில், கடந்த 12.3.2021 முதல் தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவர் பதவி காலியாக இருந்ததை அறிந்த, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், குறிஞ்சி என்.சிவகுமாரைத் தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனத்திற்குத் தலைவராக நியமித்து ஆணையிட்டுள்ளார்.

ஈரோட்டைச் சேர்ந்த குறிஞ்சி என்.சிவகுமார் கட்டுமானப் பொறியாளர் ஆவார். இவர் ஏற்கனவே ஈரோடு மாவட்ட கேபிள் டிவி உரிமையாளர்கள் நலச்சங்கத் தலைவராகவும், தமிழ்நாடு கேபிள் டிவி மல்டி சிஸ்டம் ஆபரேட்டர் சங்க மாநில துணைத் தலைவராகவும் உள்ளார். அதோடு மட்டுமல்லாமல், ஈரோடு மாவட்டத்தின் அரிமா சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, பல்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றி வருகிறார்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் ஊரடங்கு விதிமீறல்; 345 வாகனங்கள் பறிமுதல்

சென்னை, ஜூலை 7–

கொரோனா தொற்று பரவலை தடுக்கும் பொருட்டு தமிழக அரசு அறிவித்துள்ள தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு காலத்தில் நேற்று கொரோனா ஊரடங்கு விதிமுறைகளை மீறியது தொடர்பாக 328 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 345 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. முகக்கவசம் அணியாத 856 நபர்கள் மற்றும் சமூக இடைவெளி கடைபிடிக்காத 29 நபர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு தளர்வுகளுடன் ஊரடங்கு தொடர்ந்து அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில், சென்னை பெருநகர போலீஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் உத்தரவின்பேரில், முறையான தளர்வுகளுடன் கூடிய முழு ஊரடங்கு பணிகளை தீவிரபடுத்த பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் குழுவினர் நேற்று (6–ந்தேதி) மேற்கொண்ட வாகனத் தணிக்கை மற்றும் ரோந்து கண்காணிப்பு சோதனையில், சென்னை பெருநகரில் கொரோனா ஊரடங்கு தடையை மீறியது தொடர்பாக 328 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அத்தியாவசிய தேவையின்றி வெளியில் சுற்றியது தொடர்பாக 331 இருசக்கர வாகனங்கள் மற்றும் 14 ஆட்டோக்கள் என மொத்தம் 345 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், முகக்கவசம் அணியாமல் சென்றது தொடர்பாக 856 வழக்குகளும், சமூக இடைவெளி கடைபிடிக்காதது தொடர்பாக 29 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

தி ஒபராய் குழும உறுப்பினர்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
Telephone: 91-44-2234 4747, Facsimile: 91-44-2234 6699, 91-44-2234 4985
முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு: 7 ஷாம் நாத் மார்க், டெல்லி-110054
Telephone: 91-11-2389 0505, Facsimile: 91-11-23890575 Website: www.eihassociatedhotels.in
Email: isdho@oberoigroup.com; invcom@tridenthotels.com CIN: L92490TN1983PLC009903

அறிவிப்பு

செவ்வாய்க்கிழமை, 27 ஜூலை 2021 அன்று காணொலி காட்சி/பிற ஒலி ஒளி வழிமுறைகள் மூலம் கம்பெனியின் வருடாந்திர பொதுக் கூட்டத்தை நடத்துவது மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு குறித்து ஆங்கில தினசரி பிசினஸ் ஸ்டாண்டர்டு மற்றும் தமிழ் நாளேடான மக்கள் குரல் ஆகியவற்றில் ஜூன் 7, 2021ம் தேதியன்று வெளியிடப்பட்ட அறிவிப்புக்கு மேலும் தெரிவிக்கப்படுவது யாதெனில், கம்பெனி/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து பங்குதாரர்களுக்கும் கம்பெனி சார்பாக KFin டெக்னாலஜிஸ் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (''KFintech'') 2020–21 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பினை 5 ஜூலை 2021 அன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ளது என்று பங்குதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. வருடாந்திர பொதுக்கூட்டத்தை கூட்டும் அறிவிப்புடன் வருடாந்திர அறிக்கை https://evoting.kfintech.com, www.eihassociatedhotels.in, www.nseindia.com, www.bseindia.com. என்ற வலைத்தளங்களிலும் கிடைக்கிறது.

உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் 20 ஜூலை 2021 முதல் 22 ஜூலை 2021 முடிய (இரு நாட்களும் உள்ளடக்கியது) மூடப்பட்டிருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 24 ஜூலை 2021 அன்று காலை 10.00 மணிக்கு துவங்கி 26 ஜூலை 2021 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது மற்றும் அதன்பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை KFintech நிறுத்திவிடும். மின்னணு முறையில் வாக்களிக்க தகுதி உள்ளவர்களை தீர்மானிக்கும் கட் ஆப் தேதி திங்கட்கிழமை, 19 ஜூலை 2021. கூட்டத்திற்கு முன்பாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமையில்லை.

கம்பெனியின் பங்குகளை பெற்று அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினராக நபர் மற்றும் கட் ஆப் தேதியானதிங்கட்கிழமை, 19 ஜூலை 2021 அன்று பங்குகளை வைத்துள்ளவர் அவர்களது போலியோ எண்/ DP ID and Client ID ஆகியவற்றை குறிப்பிட்டு evoting@kfintech.comக்கு மின்னஞ்சல் அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே KFintech–உடன் பதிவு செய்திருந்தால் நீங்கள் உங்களது தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

ஏதேனும் கேள்விகள்/குறைகள் இருப்பின் உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் https://evoting.kfintech.comன் 'பதிவிறக்கம்' பிரிவில் கிடைக்கும் மின்னணு வாக்குப்பதிவு பயனர் கையேட்டை நீங்கள் பார்வையிடலாம் அல்லது 1800–3094–001ல் (கட்டணமில்லாது) KFintechஐ அழைக்கலாம். நீங்கள் முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு, 7 ஷாம் நாத் மார்க், டெல்லி 110054, தொலைபேசி 011–23890505, மின்னஞ்சல் ஐடி isdho@oberoigroup.comஐ தொடர்பு கொள்ளலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது அல்லது அதற்கு முன்பாகவோ தொழில்நுட்ப உதவி/ஆதரவுக்காக, உறுப்பினர்கள்1800–3094–001 என்ற எண்ணில் KFintechஐ தொடர்பு கொள்ளலாம் அல்லது evoting@kfintech.comக்கு எழுதலாம்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக

இடம்: கொல்கத்தா ஒப்பம்/– இந்த்ராணி ரே
தேதி: 7 ஜூலை, 2021 கம்பெனி செயலாளர்

ESSAR

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

முகவரி: பதிவு அலுவலகம் – 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018, தமிழ்நாடு, இந்தியா.
Tel: +91 44 2535 1271 Fax: +91 44 2535 1272
CIN No.: L65990TN2005PLC071791
Email id: eslinvestors@essar.com | Website: www.essar.com

அறிவிப்பு

செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இதர அலுவல்களுக்கு இடையே, ஜூன் 30, 2021ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, ஜூலை 14, 2021 அன்று எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே. மார்க், மகாலட்சுமி, மும்பை–400 034 மகாராஷ்டிரா என்ற முகவரியில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.essar.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
தேதி : ஜூலை 6, 2021 ரச்சனா H திரிவேதி
இடம் : மும்பை கம்பெனி செயலாளர்

PUBLIC NOTICE

This is to inform the general public that my client Mrs. Iyda Robert, Wife of Robert Wilson, residing at No.1713-C, 33rd Street, I Block, Anna Nagar, Chennai 600040 is the legal and registered owner in respect of property being (1) Plot No.408 measuring 2400 Sq.ft. comprised in Survey No. 190/B1A5, (2) Plot No.338 measuring 2400 Sq.ft. comprised in Survey No. 190/B1A5, and (3) Plot No.413 measuring 2400 Sq.ft. comprised in Survey Nos. 190/B1A6 and 190/B1A5 situated at Sivaprakasam Nagar, Soorapattu Village, Tiruvallur District, he having acquired by way of three different sale deed documents, viz., (1) 1032 of 1997 (2) 1126 of 1997 and (3) 3786 of 1997 respectively all on the file of the Sub Registrar, Ambattur, Chennai and has been in possession and enjoyment of the same since then.

It is informed that my client Mrs. Iyda Robert has lost the original Sale deed documents, viz., (1) Sale Deed Document No. 1032 of 1997 (2) Sale Deed Document No. 1126 of 1997 and (3) Sale Deed Document No. 3786 of 1997 all on the file of the Sub Registrar, Ambattur, Chennai, while she was riding as a pillion along with her husband at Pushpa Nagar, Nungambakkam, Chennai 600034 on 25.06.2021. The same could not be traced by her inspite of diligent search. My client states that she has not created any encumbrance, charge or mortgage on the said property. Any one having any interest or claim on the same, or in possession of the said document, is hereby called upon to file their objections with documentary proof to the undersigned within TEN days from this date, failing which it will be presumed that the above said original documents are lost. Finder is requested to hand over the same either to me at the below mentioned address (or) to my client at the above address.

G. Ramalingam
Advocate and Notary Public
Egmore Bar Association, Chennai

CHANGE OF NAME

I, **SUMAIYA SAMEEM,** Daughter of Thiru. A.M.Y. Munawardeen, born on 5th April 1997, (Native district:- Chennai) Residing at No:13/7, Casa Major Road, Egmore, Chennai - 600008 shall henceforth be known as

SUMAIYA
SUMAIYA SAMEEM

பொது அறிவிப்பு

சென்னை-600 010, கீழ்பாக்கம் செக்ரடேரியட் காலனி, எ-5 பராக்கா ரோடு, வி ஜெ பிளாட் நெ.52A-ல் என்ற விலாசத்தில் வசித்து வரும் திரு.ஜேசுதாஸ் அவர்களின் குமாரர் சுமார் 69 வயதுடைய திரு.J.தேவபிரசாத் செல்வராஜ் ஆகிய எனது கட்சிகாரர் Burgur Education and Welfare Trust-ன் Managing Trustee ஆக செயல்பட்டு வருகிறார் மேற்படி Trust ன் அசல் ஆவண எண்.111/1998 கடந்த 16.06.2021 அன்று ஜோர்க்ஸ் எடுக்க சென்றபோது தொலைத்துவிட்டார். மேற்படி எனது கட்சிக்காரர் திரு. J.தேவபிரசாத் செல்வராஜ் அவர்கள் தொலைத்தவிட்ட Trust ன் அசல் ஆவண எண்.111/1998 ஆனது கடந்த 05.08.1998 அன்று ராயபுரம் சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொலைந்த அசல் ஆவணத்தை யாரேனும் தன் கைவசம் வைத்திருந்தாலோ அல்லது கண்டெடுத்தாலோ இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் மேற்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். மேற்படி ஆவணத்தை யாரேனும் தன் கைவசம் வைத்திருந்து எனது கட்சிக்காரருக்கு விலங்கும் ஏற்படுத்தினாலோ அல்லது தவறாக நடக்க முயன்றாலோ அதற்கு எனது கட்சிக்காரர் எவ்வகையிலும் பொறுப்பாக மாட்டார்.

K.H.KANDABABU, B.A.B.L.,
ADVOCATE,
W-702, 2nd Street,
Anna Nagar West Extn.,
Chennai 600 101.

PUBLIC NOTICE

My client Mr. Hareesh Vasanji, has lost his Original Parent Title Deed, being Sale Deed dated 19.09.1985, registered as Doc. No.2331/1985, executed by Mr. Chinna Kannalah Naidu, to and in favour of Mr. Boopathy Naidu, while on transit. Now please take note that if any one finds the said document or is said to have possession of the said document, kindly intimate/return it to me in the below mentioned address within 10 days from the notice of this advertisement.

R.DIVYA,
Advocate,
Dr. Rajivi Towers, 3rd Floor,
No.231, Purasaiwalkam High Road,
Chennai – 600 007

ORIX

ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்

(முன்னர் ஓயிஸ் ஆட்டோ பைனான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட்) (ஓரிக்ஸ் ஆட்டோ இன்பிராஸ்ட்ரக்சர் சர்வீசஸ் லிமிடெட்டின் துணை நிறுவனம்)
பதிவு அலுவலகம்: மனை எண்.94, மாரோல் கூட்டுறவு தொழிற்பேட்டை, அந்தேரி – குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 059. தொலைபேசி எண்: +91 22 2859 5093/6707 0100, பேக்ஸ் : +91 22 2852 8549
மின்னஞ்சல் : info@orixindia.com | www.orixindia.com | CIN : U74900MH2006PLC163937

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு)

கீழ்க்கண்ட கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீஸஸ் இந்தியா லிமிடெட்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற கடன்களை பெற்றிருந்தனர். கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் பெற்ற கடனுக்கு ஈடாக உரிய சொத்துக்கள் அடமானமாக பெறப்பட்டது. கடன் ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைபிடிக்க மற்றும் ஒழுங்காக திரும்ப செலுத்த அவர்கள் தவறிவிட்டனர். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் வழிகாட்டுதலின்படி அவர்களின் கடன்கள் என்பிஏ ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீஸஸ் இந்தியா லிமிடெட்டிற்கு கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய பாக்கித் தொகை மற்றும் மேற்சொன்ன தொகையின் மீது அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான மற்றும் பொருந்தக்கூடிய மேலும் வட்டி ஆகியவை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன் வகை	கடன்தாரர்கள் பெயர்	13(2) அறிவிப்பு படி செலுத்த வேண்டிய தொகை	அறிவிப்பு தேதி	ஈடுபெற்ற ஆஸ்தி விவரங்கள்
1	LN000000 0005756	SME ஈடுபெற்ற கடன்	1. ஓம் சாய் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் 2. மெசர்ஸ் யு ஏஸ் எண்டர்பிரைசஸ் 3. திரு. ஸ்ரீனிவாசன் பழவேசம் 4. திருமதி. இசக்கியம்மாள் M 5. திரு. ராஜவேலு 6. திருமதி. உஷா பழவேசம் 7. திருமதி. சுதா	ரூ.5725920.74/-	01.07.2021	**சொத்து 1** :- பிளாட் எண்.2, கீழ் தளம், மனை எண்.67பி, 2வது தெரு, வெங்கடேசா நகர், காலிகிராமம், சென்னை - 600 093. **சொத்து 2** :- பிளாட் எண்.301/சி/3வது தளம், சாய் தம் அபார்ட்மெண்ட், மனை எண்.111, 112, 113, 102 மற்றும் 103, செக்டார் - 6, சர்சோல், நெருல் நவி மும்பை - 400 706.
2	LN000000 0005876	SME ஈடுபெற்ற கடன்	1. முருகன் A 2. திருமதி. திருசெல்வி U	ரூ.19549874.19/-	01.07.2021	சென்னை 600 088, ஆதம்பாக்கம், பாரதி நகர், சரஸ்வதி தெரு, மனை எண்.77 மற்றும் ஆதம்பாக்கம் கிராமம், பைமேஷ் எண்.389, சர்வே எண்.6/2, பிறகு சர்வே எண்.240/4, தற்போது டி.எஸ்.எண்.25, பிளாக் எண்.12-ல் உள்ள 2550 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எல்லைகள்: வடக்கில் மனை எண். 76, தெற்கில் : மனை எண்.768, கிழக்கில் : 30 அடி சாலை, மேற்கில் : துரைசாமி ரெட்டியார் நிலம்.

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கித்தொகை மற்றும் அந்தந்த தேதிகளிலிருந்து ஒப்பந்தப்படியான விகிதத்தில் வட்டி மற்றும் இதர கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் ஓரிக்ஸ் லீசிங் & பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்